## தோல்வி கண்டு துவளாமல் – மீண்டெழுந்து புகழ்க்கொடி நாட்டி

# மொழி-இனத்தைக் கண்போல் காத்திட்ட மகத்தான தலைவர் கலைஞர்!

### வட சென்னை தமிழ்ச்சங்கம் சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி உரை!

**சென்னை, ஆக. 3 -**

**வடசென்னை தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற, முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பட்டிமன்றத்தைத் தொடங்கி வைத்து, தமிழ்நாடு அரசு இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளின் இயக்குநர் டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி அவர்கள் பேசுகையில், "மொழியையும்-இனத்தையும் தன் இரு கண்களாகப் பார்த்த முத்தமிழறிஞர் கலைஞர் தொட்டத் துறைகளில் எல்லாம் சிகரம் தொட்ட மகத்தான தலைவர்" எனக் குறிப்பிட்டார்.**

விழாவில் டாக்டர் ஜெயராஜமூர்த்தி ஆற்றிய உரை வருமாறு :-

பொதுவாகவே, ஒரு நிகழ்ச்சி என்றால், இப்பொழுதெல்லாம் மக்கள் அதிக நேரம் இருந்து கேட்பதில்லை.

ஒரு காலத்திலே இதுபோன்ற இயக்கக் கூட்டங்கள் நடக்கின்றபொழுது, மாலை 6 மணிக்குத் தொடங்கி, இரவு 11 மணிவரை ஒரு அய்ந்து மணிநேரம் நிகழ்ச்சி நடைபெறும். நான் சிறுவயதிலே அதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கேட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு நான்கூட மேடையில் ஏறி பேசுகிறேன் என்றால், அதற்கு அடித்தளமிட்டது திராவிட இயக்கம் தான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

நான் என்னுடைய ஊரிலே, 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பு படித்த காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் கீழசன்னதி கீழவீதியில் விடுதலை விரும்பி எம்.பி., பேச்சாளரை அழைத்திருந்தார்கள். நான் அன்று பள்ளி மாணவனாக அவருடைய பேச்சை கேட்டிருக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் கூட்டங்களுக்கு இதுபோன்று நாற்காலிகள் எல்லாம் போட்டிருக்கமாட்டார்கள்; மணலில் அமர்ந்துதான் கேட்கவேண்டும்.

அப்படி நான் மணலில் அமர்ந்து, விடுதலை விரும்பி அவர்கள் பேசியதைக் கேட்டேன். உலக வரலாற்றைப்பற்றி பேசுகிறார்; மாவீரன் நெப்போலியனை முழங்குகிறார்; அலெக்சாண்டரை பேசுகிறார்; இங்கர்சாலை பேசுகிறார். இந்தியாவினுடைய வரலாற்றைப்பற்றி பேசுகிறார்; நேருவைப்பற்றி பேசுகிறார்; இந்திரா காந்தியைப்பற்றி பேசுகிறார்.

அதைக் கேட்டபொழுது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒன்றரை மணிநேரம் அவர் உரையாற்றினார். ஆங்கிலத்தில் இடையிடையே பேசினார். மெய்சிலிர்த்துப் போய் நான், "பேசினால், இவரைப்பற்றி பேச வேண்டும்" என்று அன்றைக்கு நான் கனவு கண்டேன். இன்றைக்கு ஒரு 25 சதவிகிதமாவது நான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

கலைஞருடைய பேச்சை நான் மிகவும் ரசித்து, விரும்பி கேட்பேன்.

**இனி ஒரு தலைவரை பார்ப்போமா?**

தமிழ்நாட்டில் எத்தனையோ தலைவர்கள் கலைஞருக்கு முன்பாக வாழ்ந்திருக்கிறார்கள்; முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், கலைஞரைப்போல, எழுத்திலும், பேச்சிலும் சிறந்த ஒரு தலைவரை, கலைஞருக்கு முன்பு நான் பார்த்ததில்லை; இனி பார்ப்போமா என்றால், சந்தேகம்தான்.

பல பேருக்கு மேடையில் நன்றாகப் பேச வரும். ஆனால், கலைஞரைப்போல எழுதியிருக்கிறார்களா என்றால், கேள்விக்குறிதான். நிச்சயமாக இல்லை என்று சொல்வேன்.

நிறைய பேர் நன்றாக எழுதுவார்கள். நூலாசிரியர்களாக, புதினங்கள் படைக்கக் கூடியவர்களாக, கவிஞர்களாக உலா வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், மேடையில் எப்படிப் பேசவேண்டும்? எங்கே இருந்து தொடங்கவேண்டும்? எந்தெந்த கருத்தை எப்பொழுது சொல்லவேண்டும்? நமக்கு முன்பாகப் பேசியவர்கள் பேச்சிலிருந்து எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் அந்த நேரத்திற்குத் தகுந்தாற் போல் பேசக்கூடிய வல்லமை

**சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் – அச்சொல்லை**

**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.**

என்பார் வள்ளுவர்.

அதற்கேற்ப,

**கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும்**

**வேட்ப மொழிவதாம் சொல்.**

என்கின்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்த எழுதக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஒரே தலைவர் எனக்குத் தெரிந்து

தானைத்தலைவர், முத்தமிழறிஞர், அய்ந்தமிழறிஞர், மூதறிஞர்

கலைஞர் ஒருவர்தான்.

**இளைய சமுதாயம் உணர வேண்டும்!**

அவருடைய பன்முக ஆற்றல் என்பது கலைஞரைப்போல யாருக்கும் வாய்த்ததில்லை. தொட்டத் துறைகளில் எல்லாம் சிகரத்தைத் தொட்ட மகத்தான தலைவர் மாபெரும் தலைவர். தோன்றின் புகழோடு தோன்றுக அதற்கு அவர்கள் விளக்கம் எழுதுகிறபொழுது, எந்தத் துறையில் ஈடுபட்டாலும், அதிலே புகழ்க்கொடியை நாட்டவேண்டும் என்பார் கலைஞர். அப்படி நாட்டியவர்தான் கலைஞர் அவர்கள்.

இங்கே வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்களே, கலைஞரைப் பற்றி பலர் பேசுவார்கள்; வாய்ப்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்கின்ற நிலையில், பல பேர், பலவிதமாகப் பேசுவார்கள்.

ஆனால், கலைஞருடைய உழைப்பு, அவருடைய முயற்சி, தோல்வியைக் கண்டு துவளாமல், மீண்டும் மீண்டும் எழுந்து வந்ததையெல்லாம் இந்த உலகம், இன்றைய மாணவர் சமுதாயம், இளைய சமுதாயம் உணர வேண்டும்.

21 வயதிலேயே கவிதை எழுதுகிறார். பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்.

ஈ.வெ.ரா. என்ற வார்த்தை இந்நாட்டு ஆரியத்தின் அடிப்பீடத்தை ஆட்டுகின்ற சூறாவளியாம்!

அவர் வெண்தாடி அசைந்தால் போதும் கண் சாடை தெரிந்தால் போதும்;

கறுப்புடை தரித்தோர் உண்டு நறுக்கியே திரும்பும் வாள்கள்!!"

1941-ஆம் ஆண்டில், மாணவ நேசன் என்கிற பத்திரிகையைத் தொடங்குகிறார். அப்பொழுது அவ



ருக்கு 16 வயது.

**புரட்சிக் கவிஞரின் வாழ்த்துச் செய்தி!**

16 வயதிலே ஒரு மாணவன் பத்திரிகையை ஆரம்பிக்கின்றான் என்றால், நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்த மாணவ நேசன் பத்திரிகை தான், பின்னாளில், முரசொலியாக உருவெடுத்தது. மாத இதழாக ஆரம்பித்து, ஒரு காலகட்டத்தில், அது வார இதழாக மாறி, 1969-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான், முரசொலி நாளிதழாக மாறியதாக அதனுடைய வரலாறு சொல்லுகிறது.

அதேபோல, 1942 -ஆம் ஆண்டு தமிழ்நாடு மாணவர் மன்றம் அமைக்கிறார். அன்றைக்கே இனத்தினுடைய மீட்சிக்காக, மாணவராக இருந்த பொழுதே குரல் கொடுத்தவர் கலைஞர்.

அதற்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு மடல் எழுதுகிறார்; நீங்கள் வாழ்த்துச் செய்தி அனுப்புங்கள் என்கிறார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடமிருந்து வாழ்த்துச் செய்தி அஞ்சலட்டையில் வருகிறது.

**"கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்**

**அது கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை"**

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழ்நாடு மாணவ மன்றத்தின் தலைவராக இருந்த கலைஞருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய வரலாற்றை இன்றைய மாணவச் சமுதாயம் உணர வேண்டும்.

இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம்.

23 வயதில் கலைஞர் அவர்கள் திரைப்பட வசனகர்த்தா. இன்றைக்கு கிரிக்கெட் வீரர் இளம்வயதிலேயே வந்துவிட்டார் என்று சொல்கிறீர்கள். அவர் ஒரு பேட்ஸ்மேன், அவ்வளவுதான்.

ஆனால், கலைஞர் அவர்கள் 23 வயதில் ராஜகுமாரி திரைப்படத்தை, வெற்றிகரமான படமாக மாற்றி, ஓட வைத்திருக்கிறார்.

இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டு சரித்திரத்திலேயே முதன் முதலாக ஒரு திரைப்படத்தினுடைய வசனம், புத்தகமாக வெளிவந்தது என்றால், அது மனோகரா திரைப்படத்தின் வசனம்தான்.

1952, பராசக்தியை நாம் மறக்க முடியுமா? இன்றுவரையில் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோமே!

அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள், அறிவு கெட்டவனே!

இப்படி எழுதுவதற்கு ஒரு துணிவு வேண்டும்; ஒரு கெத்து வேண்டும். அறிவும் வேண்டும்.

என்னடா, முழிக்கிறீங்க? என்பார்.

ஏண்டா, தூங்குகிறவனை எழுப்பினால், முழிக்காமல், என்னடா செய்வான்?

நீ என்ன பிக்பாக்கெட்டா?

இல்லை, எம்டி பாக்கெட்.

இவையெல்லாம் பஞ்ச் டயலாக்.

இன்றைக்குச் சொல்கிறார்கள் பஞ்ச் டயலாக் என்று; அன்றைக்கே பஞ்ச் டயலாக்கை வைத்து வசனம் எழுதிய ஒரே தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

இந்த இனத்தினுடைய, இந்த மொழியினுடைய மீட்சிக்காக 1953 ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டம். அந்த வரலாற்றைப் படித்துப் பாருங்கள்.

**கல்லக்குடி போராட்டம்!**

டால்மியாபுரம் என்று இருந்த அந்த ஊரை, கல்லக்குடி என்று மாற்றவேண்டும் என்பதற்காக, களத்திலே இறங்கியவர்.

அங்கே இருக்கின்ற புகைவண்டி நிலையம்; இப்பொழுது புகைவண்டி நிலையம் என்று சொல்ல முடியாது; தொடர்வண்டி நிலையம் என்று சொல்லலாம்.

தொடர்வண்டி நிலையத்தின் பெயர்ப் பலகையில், டால்மியாபுரம் என்று எழுதியிருக்கிறது; அதன்மேல், கல்லக்குடி என்கிற போஸ்டரை ஒட்ட வேண்டும்.

அப்பொழுது திடீரென்று ரயில் வந்துவிடுகிறது; உடனே தண்டவாளத்தில் படுத்துவிடுகிறார். அவருடன் ஒரு அய்ந்து நபர் இருந்தனர்.

காவல்துறையினரும் அங்கே வந்துவிடுகிறார்கள். அதை எடுக்கச் சொல்கிறார்கள். முடியாது என்கிறார். உடனடியாக எங்களுக்குத் தீர்வு வேண்டும் என்கிறார்.

முறைப்படி கடிதம் அனுப்பி, உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்கிறார்கள்.

கலைஞர் அவர்களோ, முடியாது, எங்களுக்கு இப்பொழுதே தீர்வு வேண்டும் என்கிறார்.

ரயிலை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்; அதனால், கலைஞரும், கலைஞரோடு இருந்தவர்களும் மிரண்டு போய் எழுந்துவிடுவார்கள் என்று நினைத்தார்கள். ஆனால், புகைவண்டி, ஓலமிட்டுக்கொண்டே, இவர்களுடைய அருகில் வந்து நின்றது.

அப்படி அந்தப் புகைவண்டி வரும் பொழுதுகூட, உயிருக்குப் பயந்து எழுந்து ஓடாத ஒரு துணிச்சல் மிக்க ஒரு தலைவர் கலைஞர்.

உண்மைகளைப்பற்றி படிக்காமல், சில பொய்ச் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கக் கூடிய இக்காலத்தில், தமிழ் இனமே, இளைய சமுதாயமே கலைஞருடைய வரலாற்றை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

அவருடைய "நெஞ்சுக்கு நீதி"யின் ஆறு பாகங்களைத் தொடர்ந்து படியுங்கள்.

எனக்குத் தெரிந்து, உலக வரலாற்றிலே இவ்வளவு நீண்ட நெடிய வரலாற்றை எந்தத் தலைவனும் எழுதியதில்லை.

**கலைஞரின் வரலாற்றைப் படியுங்கள்!**

சத்ய சோதனையை காந்தி எழுதியிருக்கிறார்; அது ஒரு சிறிய புத்தகம் தான். காந்தியடிகள் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையை, நெறியை அகிம்சையை, சத்தியத்தை தந்திருக்கிறார்.

நேருகூட தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். ரவீந்திரநாத் தாகூர்முதல், நம்முடைய அப்துல்கலாம் வரை இன்னும் சொல்லப்போனால், "என் சரித்திரம்" என்ற என்னைக் கவர்ந்த மிகச் சிறந்த ஒரு சுயசரிதை உ.வே.சாமிநாத அய்யருடையது. அதையெல்லாம் நீங்கள் படித்துப் பார்க்கவேண்டும்; மொழியினுடைய வரலாறு எப்படி வந்தது என்று.

அந்த சுயசரிதை வரிசையிலே, 'நெஞ்சுக்கு நீதி' என்று ஆறு பாகங்கள்; அவ்வளவு பக்கங்கள்; 1924 ஆம் ஆண்டு அவர் பிறந்ததிலிருந்து 2006 ஆம் ஆண்டுவரைதான் அவருடைய வாழ்க்கை வரலாற்றை அதில் பதிய வைத்திருக்கிறார்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரை 12 ஆண்டுகால வாழ்க்கை வரலாற்றை இன்னும் எழுதவில்லை. அதையும் எழுதியிருந்தால், 7 ஆம் பாகம், 8 ஆம் பாகம் என்று நெஞ்சுக்கு நீதி வந்திருக்கும்.

அதேபோல, அவர் எழுதிய கடிதம் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் - "முரசொலியில்" அவர் எழுதிய கடிதங்களையெல்லாம் இன்றைக்கு நினைத்துப் பார்த்தால், எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

சாதாரணமாக, நம்முடைய நண்பர்கள் கடிதம் எழுதினால்கூட, பதில் கடிதம் போடுவதற்கு 5, 6 நாள்கள் ஆகும்; சில பேர் கடிதமே எழுதமாட்டார்கள்.

ஆனால், தொடர்ந்து இந்த இயக்கத்தில் இருக்கக்கூடிய உடன்பிறப்புகளுக்கு, 13 ஆண்டுகாலம் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, ஆட்சிக் கட்டிலில் அமர முடியாத ஒரு சூழ்நிலை இருந்தபொழுது, தன்னுடைய எழுத்தால், தொண்டர்களை தம்வசப் படுத்தி, இந்த இயக்கத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்த ஒரே மகத்தான தலைவர், கலைஞர் அவர்கள்தான்.

**இனத்தின் மீட்சி!**

இந்த இனத்தினுடைய மீட்சிக்காக இரண்டு செய்திகளை சொல்கிறேன்.

ஒன்று, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கின்ற ஒப்பற்ற சட்டத்தை, 1970 ஆம் ஆண்டிலேயே கலைஞர் அவர்கள், சட்டமன்றத்திலே வழிமொழிகிறார் என்றால், அதனுடைய மீட்சியாகத்தான் 2022 ஆம் ஆண்டில், 28 பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களை இன்றைய முதலமைச்சர் அர்ச்சகர்களாக்கி இருக்கிறார்.

இது ஒரு சமத்துவம்; ஓர் இனத்தினுடைய மீட்சி!

அதேபோல, தமிழில் வழிபாடு வேண்டும். ஒரு காலத்தில், தமிழிலும் வழிபாடு செய்யவேண்டும் என்று இருந்ததை மாற்றி, இன்றைக்குத் தமிழில் வழிபாடு நடத்தலாம்.

ஆண்டவனை நம்முடைய தாய் மொழியால், நம்முடைய அன்னைத் தமிழால், நாம் துதிக்கலாம், போற்றலாம், அர்ச்சனை செய்யலாம் என்கின்ற சட்டத்தைக் கொண்டு வந்து, இந்த இனத்தை, இந்த மொழியைக் காப்பாற்றிய இயக்கம் திராவிட இயக்கம். அதனுடைய ஒரு ஆலமரமாக, இன்னும் விழுதாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தலைவர் நம்முடைய தலைவர்.

1938-ஆம் ஆண்டிலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டார்.

தன்னுடைய 14-ஆம் வயதிலேயே கலைஞர் அவர்கள்,

"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்!

நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே!"

என்று 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, திருவாரூர் தெருக்களில், வில், புலி, கயல் என்கின்ற மூவேந்தர் கொடியை, கையில் ஏந்தியவாறு, இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று முழக்கமிட்ட மாணவன்தான், பின்னாளில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக, அரசாட்சி செய்து அளப்பரிய சாதனைகளைச் செய்தவர்.

**தமிழ்மொழி வளர்ச்சி!**

நான் வருகின்ற வழியில், அடுக்குமாடி குடியிருப்புகளைப் பார்த்து, என்னுடைய ஓட்டுநரிடம் கேட்டேன், இது என்னவென்று?

இவையெல்லாம் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் என்றார்.

அந்தக் குடிசைமாற்று வாரியத்தை முதன்முதலாகத் தமிழ்நாட்டில் கொண்டு வந்தது நம்முடைய தலைவரான கலைஞர் அவர்கள்தான்.

அதுபோல, கைரிக்சா ஒழிப்பு, உழவர்களுக்கான திட்டம், மருத்துவர்களான திட்டம், தொழிலாளர்களுக்கென்று, மீனவர்களுக்கு என்று யாரையுமே விட்டு வைக்கவில்லை.

தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக, தமிழ்த்தாய் வாழ்த்தை 1970 ஆம் ஆண்டு தந்தவர்; 2010, 2011 ஆம் ஆண்டு செம்மொழி ஆய்வு மாநாட்டினை கோவையில் மிகச் சிறப்பான முறையில் நடத்தி, இந்த மொழி என்றைக்கும் வாழவேண்டும்; இந்த மொழி வாழ்ந்தால்தான், இந்த இனம் காப்பாற்றப்படும்.

இந்த இனத்தினுடைய பெருமை, நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் எல்லாமே மொழியின் அடிப்படையில் தான் இருக்கிறது.

இவ்வாறு டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி உரையாற்றினார்.

---

பெருநகர சென்னை மாநகராட்சி

## தேனாம்பேட்டை மண்டலத்தில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, ஆக.3-


பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 114க்குட்பட்ட பங்காரு தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.2.47 கோடி மதிப்பில் 9,100 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளத்துடன் கூடிய சென்னை நடுநிலை பள்ளிக் கட்டடம் கட்டபடவுள்ளத்தை முன்னிட்டு அவ்விடத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு115க்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் மாநில மேலாண்மை பேரிடர் நிதியின் கீழ் ரூ.1.67 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு116க்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.1.05 கோடி மதிப்பில் 4,656 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திறன் மற்றும் விளையாட்டு மையத்தின் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு இப்பணியை தரமாகவும் விரைவாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு 120க்குட்பட்ட லாயட்ஸ் காலனியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.7.13 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நாய் இனக்கட்டுப்பாட்டு மையக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர்கள் திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்), நிலைக்குழுத் தலைவர்கள் நே.சிற்றரசு (பணிகள்), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர். பி.எம். காமராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், தமிழ்நாடு கேரம் சங்க சீனியர் துணை தலைவர், திருப்பூர் மாவட்ட செயலாளர் அம்மன் ஃபேஷன் எஸ்.சிவக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய அளவிலான மாபெரும் ஆண்களுக்கான ஒற்றையர் கேரம் போட்டியில் (தம்பிங்) வெற்றி பெற்றவர்களுக்கு க.முத்தம்மாள் நினைவு கோப்பையை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பகுதி செயலாளர் போலார் ஆர்.சம்பத்குமார், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, வட்டக் கழக செயலாளர் நித்யானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.குணராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் ப.கலைச்செல்வி, தொண்டர் அணி அமைப்பாளர் ஆனந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.